சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–08.06.2020

## அவசரக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, சார்வரி வருடம் வைகாசி மாதம் 26–ஆம் நாள் ( ஜீன் திங்கள் 08–ஆம் நாள்:– 08.06.2020) திங்கள் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை இணைப்பு மற்றும் இயற்கை பேரிடரால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணி மேற்கொள்ள ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் **(IUDM)** 2020–21–இன் கீழ் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **வேலையின் பெயர்** | **மதிப்பீடுகள் (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1. | சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட எழில்நகர், தலைமை நீரேற்று நிலையம் சாலை, பழைய பாளையம் ரோடு, பழைய பாளையம் குறுக்குத் தெரு, அய்யனார்புரம் குறுக்குத் தெரு, லெட்சுமி நகர், உரக்கிடங்கு சாலை, பள்ளிக்கோட்டைபட்டி சாலை ஆகிய இடங்களில் தார்ச்சாலை அமைக்கும் பணி மற்றும் கீழப்பூலானந்தபுரம் குறுக்குத் தெரு, பொன்னகர் குறுக்குத் தெரு, காந்தி நகர் காலனி 8வது குறுக்குத் தெருக்கள், சந்தைப்புதூர் குறுக்குத் தெரு, மேல்நிலைப்பள்ளி சாலை, சிவசக்தி நகர் குறுக்குத் தெரு, உழவர் சந்தை சாலை, அழகர்சாமி நகர் குறுக்குத் தெரு, அய்யனார்புரம் குறுக்குத் தெரு, அண்ணா சிலை முதல் வண்டிப்பேட்டை ரவுண்டானா வரை பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 195.00 |
| 2. | சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட கீழப்பூலானந்தபுரம் மெயின் ரோடு, கண்ணம்மாள் கார்டன் சாலை, பொன்னகர் மெயின் ரோடு, காலனி பள்ளி வடக்குத் தெரு, சாமிகுளம் மெயின் ரோடு, சாமிகுளம் மெயின் ரோடு (MCC) , சிவசக்தி நகர் சாலை, மின்னகர் குறுக்குத் தெரு மற்றும் தண்ணீர் தொட்டி தெருக்களில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைக்கும் பணி | 185.00 |
| 3. | சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட வஉசி 1வது தெரு, பட்டாளம்மன் கோவில் 1வது தெரு, காந்தி நகர் காலனி 6வது தெரு, காந்தி நகர் காலனி 8வது தெரு (ரவி இல்லம்), காந்தி நகர் காலனி 5வது தெரு, காந்தி நகர் காலனி 4வது தெரு, காளியம்மன் கோவில் தெரு, காளியம்மன் கோவில் குறுக்குத் தெரு, காந்தி நகர் காலனி 8வது தெரு, காந்தி நகர் காலனி 8வது குறுக்குத் தெரு, காந்தி நகர் காலனி (வேட்டை கருப்பசாமி கோவில்), காந்தி நகர் காலனி 7வது தெரு (ஷீலா ஸ்டோர்), சந்தை புதூர் தெரு, தினசரி மார்க்கெட் தெரு ஆகிய இடங்களில் தார்ச்சாலை அமைக்கும் பணி | 120.00 |
| | **மொத்தம்** | **500.00** |

**அலுவலகக் குறிப்பு:–**

**1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2.நகராட்சியில் போதிய நிதி இல்லாத காரணத்தினாலும் மேற்படி பணிகளுக்கான மதிப்பீடு ரூ.500.00 இலட்சத்தினை ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2020–2021–இன் கீழ் அரசு முழுமான்யமாக வழங்கக்கோரி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கலாம். (ந.க.எண்.1654/2020/இ1).**

**தீர்மான எண், நாள்** **38, நாள்.08.06.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.2**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN60V8239 என்ற டிப்பர் லாரிக்கு 2020–2021–ஆம் ஆண்டிற்கான இன்சூரன்ஸ் பிரிமியத் தொகை ரூ.31048/–ஐ தேனி யுனைடேட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்த பட்டியல் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து மேற்படி தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0308/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்** **39, நாள்.08.06.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.3**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகன எண்.TN60S6634–க்கு புதிய மின் கலப்பெட்டி (Battery) வாங்கி பொருத்தும் பணிக்கு நகர்மன்றத் தீர்மான எண்.34, நாள்.29.05.2020 அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை செய்வதற்கு 03.06.2020–ஆம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | கோகுல் பவர் சிஸ்டம், சின்னமனூர் | ரூ.6500/– |
| 2. | கே.ஜி.எண்டர்பிரைசஸ், சின்னமனூர் | ரூ.6900/– |

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் கோகுல் பவர் சிஸ்டம், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால் மேற்படி விலைப்புள்ளிதாரரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம், மேலும் நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7057/2014/இ2)**

**தீர்மான எண், நாள்** **40, நாள்.08.06.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.4**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் உள்ள (குடிநீர் லாரி) வாகன எண்.TN60**3761**க்கு புதிய மின் கலப்பெட்டி (எக்ச்சைடு எக்ஸ்பிரஸ் பேட்டரி) வாங்கி பொருத்தும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.**32**, நாள்.**29.05.2020** அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை செய்வதற்கு **03.06.2020**–ஆம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **விவரம்** | **தொகை** |
|---|---|---|
| 1. | Imperial Battery Corner, Theni | ரூ.**9300/–** |
| 2. | M.R.Auto Mobile & Battery Service, Theni | ரூ.**9450** |
| 3. | Balaji Battery Service, Theni | ரூ.**9750/–** |

**அலுவலகக் குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் **Imperial Battery Corner, Theni** அவர்களின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால் மேற்படி விலைப்புள்ளிதாரரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம், மேலும் நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0324/2014/இ2)

**தீர்மான எண், நாள்** **41, நாள்.08.06.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.5**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகன எண்.**TN60T4228** என்ற டம்பர்பிளேசர் வாகனத்திற்கு **2019–2020**–ஆம் ஆண்டிற்கான புதுப்பித்தல் பணி மேற்கொள்ளும் பொருட்டு சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்கண்ட மராமத்துப் பணிகளை அங்கீகரிக்கப்பட்ட பணிமனையில் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.**150000/–** நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.0661/2020/எச்1)

**தீர்மான எண், நாள்** **42, நாள்.08.06.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******